# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2211/50 - 2021 ජනවාරි මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.01.21

*2211/50 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. பி. 4/81* (XIII)

**1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டம்**

*1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**மஹிந்த அமரவீர,**
*சுற்றாடல் அமைச்சர்.*

கொழும்பு,
*2021, சனவரி 19.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள், 2021 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தேசிய சூழல் (பிளாஸ்டிக் பொருட்களை அடையாளம் காணும் நியமங்கள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஏதேனும் உற்பத்தி செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள், இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை அடையாளம் காணும் நியமங்களுக்கு இணங்க தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

3. நிரல் II இல் சுருக்கீடு இடப்பட்ட இதற்கான அட்டவணையில் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள் ஒன்று அவ்வட்டவணையின் நிரல் III இல் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட மூன்று குறியீட்டு விருப்பத் தெரிவுகளில் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. இவ்வொழுங்கு விதிகளில் -

“பிளாஸ்டிக் பொருள்” என்பது பொலிஎதிலீன் டெரெப்தலேட், உயர் அடர்த்தி கொண்ட பொலிஎதிலீன் குறைவான அடர்த்தி கொண்ட பொலிஎதிலீன், பொலிவினைல் குளோரைட்டு, பொலிபுரொப்பிலீன், பொலிஸ்டிரீன் அல்லது வேறேதேனும் ஒத்த மூலப்பொருள் அல்லது அதன் ஏதேனும் கலவையைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்கள் எனப் பொருள்படும்.

**அட்டவணை**

(ஒழுங்குவிதி 2)

**பிளாஸ்டிக் பொருட்களை அடையாளம் காணும் நியமங்கள்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* | | |
|---|---|---|---|---|
| *பொருட்கள்* | *பொருட்களின் சுருக்கீடுகள்* | *குறியீட்டு விருப்பத் தெரிவுகள்* | | |
| | | *1* | *2* | *3* |
| (1) பொலிஎதிலீன் டெரெப்தாலேட் | PETE அல்லது PET | 01 PET | 1 PETE | 1 |
| (2) உயர் அடர்த்தி கொண்ட பொலிஎதிலீன் | HDPE அல்லது PE-HD | 02 PE-HD | 2 HDPE | 2 |
| (3) பொலிவினைல் குளோரைட்டு | PVC அல்லது V | 03 PVC | 3 V | 3 |
| (4) குறைந்த அடர்த்திகொண்ட பொலிஎதிலீன், நேரியல் குறைந்த அடர்த்தி கொண்ட பொலிஎதிலீன் | LDPE அல்லது PE-LD | 04 PE-LD | 4 LDPE | 4 |
| (5) பொலிபுரொப்பிலீன் | PP | 05 PP | 5 PP | 5 |
| (6) பொலிஸ்டைரீன், விரிவாக்கப்பட்ட பொலிஸ்டிரீன், ஸ்டைரோஃபோம் | PS | 06 PS | 6 PS | 6 |
| (7) அக்ரிலிக், நைலோன், பொலிகார்பனேட்டு மற்றும் வெவ்வேறு பிளாஸ்டிக்குகளின் பல் அடுக்கு சேர்க்கைகள் போன்ற பிற பிளாஸ்டிக்குகள் | OTHER அல்லது O | 07 OTHER | 7 O | 7 |

*02-15*